மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

OS No: 1119/2015

Date : 14.07.2025 P.W.2 புஷ்பவள்ளி, க/பெ.சங்கப்பிள்ளை

**வா.சா.2 முன்னிலை. சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தந்தை பெயர் அன்னாசாமி என்றால் சரிதான். யார் வழக்கு போட்டுள்ளார் என்றால் எனது அண்ணன் பெருமாள் வழக்கு போட்டுள்ளார். எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் என் அப்பா இறந்த பிறகு என் அம்மா என் தம்பி மகனுக்கு உயில் எழுதி வைத்துவிட்டார், அதனால் பெருமாள் வழக்கு போட்டுள்ளார். நான் இந்த வழக்கில் 6–வது பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது அம்மா உயில் எழுதி வைத்தபோது அவருக்கு 85 வயது ஆனது. எனது அம்மாவிற்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. அன்னாசாமிக்கு எப்படி சொத்து கிடைத்தது என்றால் அவரின் மூன்று சகோதரர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவின்படி சொத்து கிடைத்தது. ராஜாத்தியம்மாளை யார் ரிஜிஸ்டர் செய்ய கூட்டி சென்றது என்றால் நான்தான் கூட்டி சென்றேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எழுத படிக்க தெரியும். நான் 7–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்பொழுது எனக்கு 79 வயது ஆகிறது. அன்னாசாமிக்கு வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்னாசாமிக்கு பாகத்தில் கிடைத்த எல்லா சொத்துக்களையும் சேர்த்தார்களா அல்லது சில சொத்துக்களை மட்டும் சேர்த்தார்களா என்றால் சில சொத்துக்களை மட்டும் சேர்த்தார்கள். 1 மற்றும் 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளிடம் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை. 1–ம் பிரதிவாதி பெருமாள் இறந்த சடங்கிற்கு நான் போகவில்லை என்றால் சரிதான். கணேசன் வகையறாவுடன் பேச்சு வார்த்தை உண்டு. ராஜாத்தி உயில் எழுதி வைத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. ராஜாத்திக்கு உயில் எழுதும் அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. பெருமாள் மீது உள்ள விரோதத்தால் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP040022752015/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com



III ASJ COURT, TRICHY

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சி விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளித்து என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

Sd/Thiru.J.Kannan,

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP040022752015/truecopy/order-2.pdf